A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

### முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்

### மேல்முறையீட்டு மனு எண் 84 / 2021

திருமதி S. செல்வி சாந்தாபாய்,
97A, 2வது ஐசக் தெரு,
நாசரேத் – 628 617.

………மேல்முறையீட்டாளர்
(திருமதி S. செல்வி சாந்தாபாய்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 131, 132, எட்டபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

2. உதவிபொறியாளர்/விநியோகம்/நகர்/நாசரேத்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
62/19 HC மார்கட் தெரு, நாசரேத் – 628 617.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு I. ராம்மோகன்,செயற்பொறியாளர்/திருசெங்கோடு
திருமதி. D.K. சுவர்ணலட்சுமி, உதவி பொறியாளர் நகர்/நாசரேத்)

**மனு பெறப்பட்ட நாள்: 15-11-2021**

**கேட்புரை நாள்: 06-01-2022**

**ஆணை நாள்: 17-02-2022**

15.11.2022 அன்று பெறப்பட்ட திருமதி S. செல்வி சாந்தாபாய், 97A, 2வது ஐசக் தெரு, நாசரேத் – 628 617அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 84/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 06.01.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

(i) மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள மின் அளவியில் பதிவு செய்யப்பட்டுள்ள Reading–யை downdload செய்து சரியான கட்டணத்தை தெரிவிக்குமாறும், நிர்ணயிக்கப்பட்டுள்ள சராசரி மின் கட்டணத் தொகையை ரத்து செய்யுமாறும், தான் செலுத்தியுள்ள கூடுதல் தொகையை திரும்ப வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

(ii) மேலும், 11/2020 கட்டண காலத்திற்கு கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.4,972/–யை திரும்ப வழங்கும்படியும், அவ்வாறு வசூலிப்பதற்கு உத்தரவிட்ட மின்வாரிய அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் விதிக்கப்பட்ட சராசரி மின் கட்டணத்தை செலுத்திய பின்பு அத்தொகையை தனக்கு திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் உதவி பொறியாளருக்கு கடிதம் அளிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்கண்ட கடிதத்தை பெற்றுக் கொண்ட எதிர்மனுதாரர், 11/2020 காலத்தில் மின்அளவி பழுதுபட்டிருந்ததாகவும், எனவே சராசரி தொகை நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தான் செலுத்திய சராசரி தொகையை தனக்கு திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 09.04.2021 அன்றுஅணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் 17.09.2021 நாளிட்ட தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இம்மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 17.09.2021 நாளிட்ட ஆணையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*நாசரேத் விநியோகப் பிரிவிற்குட்பட்ட மனுதாரர், திருமதி செல்வி சாந்தாபாய் அவர்களின் மின் இணைப்பு எண் 370-011-616-ல் வசூலிக்கப்பட்ட மின் கட்டணத் தொகை, தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு எண் (11)ன் வழிகாட்டுதலின்படியே கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் சார்பாக மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் ஆஜரான செல்வி K.பாரதி அவர்களிடமும் விளக்கிக் கூறப்பட்டு, தமிழ்நாடு மின் ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு வழிகாட்டு முறைகளின் மின் அளவி பழுது தொடர்பான நகல் வழங்கப்பட்டு, இம்மன்றம் இம்மனுவை முடித்து வைக்கின்றது."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 06.01.2022 அன்று காணொளி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திருமதி S. செல்வி சாந்தாபாய் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொள்ளவில்லை.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு I. ராம்மோகன்,செயற்பொறியாளர்/திருசெங்கோடு மற்றும் திருமதி. D.K. சுவர்ணலட்சுமி, உதவி பொறியாளர்/நகர்/நாசரேத், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண் : SC No. – 07370011616–இன் 11/2020 கட்டண காலத்திற்கான மின் கட்டணம் மின்வாரிய கணக்கீட்டாளரால் நேரடியாக மீட்டரைப் பார்த்து பதிவு செய்யப்பட்டு ரூ.5,278/– என மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், மேற்கண்ட தொகையினை உரிய காலத்திற்குள் மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ளார் எனவும், இந்நிலையில் கட்டண காலம் 3/2021 க்குரிய கட்டணத்தொகை ரூ.3,760/–ஐ செலுத்தும் போது average shortfall ஆக ரூ.4,972/–யையும் சேர்த்து செலுத்தும் பட்சத்திலேயே நடப்பு காலமான 3/2021 கட்டண காலத்திற்குரிய தொகையினை செலுத்த இயலும் எனத் தெரிவிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 எனவே மேல்முறையீட்டாளர் வேறு வழியில்லாத நிலையில், மின் இணைப்பு துண்டிப்பை தவிப்பதற்காக average shortfall தொகையையும் சேர்த்து 29.03.2021 அன்று செலுத்தியுள்ளதாகவும், Average shortfall தொகையை திரும்ப வழங்குமாறு கேட்டு 30.03.2021 தேதியன்று எதிர்மனுதாரருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், அதனை பெற்றுக் கொண்ட எதிர்மனுதாரர் அவரது 30.04.2021 தேதியிட்ட கடிதத்தின் மூலம் கட்டண காலம் 11/2020–இல் மின்மீட்டர் பழுது பட்டிருந்ததாகவும், எனவே சராசரி தொகை நிர்ணயிக்கப்பட்டு குறைவுத் தொகை ரூ.4,972/– வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 11/2020 கட்டணகாலத்திற்குரிய மின் கட்டணமானது மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் உள்ள மீட்டர் நல்ல நிலையில் இயங்கும் போது மின்வாரிய கணக்கீட்டாளரால் (Assessor) பதிவு செய்யப்பட்டதாகும் எனவும், மேற்கண்ட காலத்தில் மின்சார மீட்டர் பழுதுபட்டதாக தீர்மானிப்பதற்கு எவ்வித காரணமும் கிடையாது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேலும் மேற்கண்ட மின்சார மீட்டர் பழுது பட்டிருந்ததாக உரிய தகுதி வாய்ந்த அலுவலர் எவரும் மின்சார மீட்டரை ஆய்வு செய்து தீர்மானிக்கவில்லை எனவும்,

மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மின்சார மீட்டர் மின்கருவி ஆய்வகத்திற்கு அனுப்புமாறு மேல்முறையீட்டாளர் கோரியபடி அனுப்பப்பட்டதாக எதிர்மனுதாரர் 27.02.2021 தேதியிட்ட க.எண்.உ.மி.பொ/வி/நாசரேத்/வ.அ./இ.எண்: 83ன் படி தெரிவித்துள்ள நிலையில் அதன் ஆய்வறிக்கையை பெற்று பிரச்சனையை தீர்மானிக்க நுகர்வோர் மன்றம் தவறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேலும் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் மின்சார மீட்டர் பழுதுபட்டிருந்ததாக கருதுவதற்கு எதிர்மனுதாரர் கூறும் ஒரே காரணம் 'No display' என்ற நிலையில் display சரியாக இயங்கும் காலத்தில் பதிவு செய்யப்பட்ட மின் அளவு சரியானதாக கருதப்பட வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் மின்மீட்டர் பழுதுபட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது குறித்தோ, அதனை தொடர்ந்து மின்மீட்டர் அப்புறப்படுத்தப்பட்டு, புதிய மீட்டர் பொருத்தப்பட்டது குறித்தோ, மேல்முறையீட்டாளருக்கு எவ்வித அறிவிப்புமின்றி (Behind the back) செய்யப்பட்டிருப்பதனை நுகர்வோர் நீதிமன்றம் தவறு என தீர்மானித்திருக்க வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் 11/2020 கட்டண காலத்திற்கு ஏற்கனவே வசூலிக்கப்பட்ட மின்கட்டணம் தவறானது என எதிர்மனுதாரர் கருதும் பட்சத்தில் திருத்தி அமைக்கப்பட்ட கட்டணப் பட்டியலை மேல்முறையீட்டாளர்க்கு சார்பு செய்யாமல் அதனை பின்வழியாக நடப்பு கட்டணத்துடன் இணைத்து வசூலிப்பது முறையற்ற செயலாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 1/2021 கட்டண காலத்தில் மின்சார மீட்டர் பழுதுபட்டிருந்ததாக தீர்மானித்து தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி சப்ளே கோர்டு 11(2) ன் படி சராசரி உபயோகம் 1800 யூனிட் என தீர்மானித்தது தவறானதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மின்சார மீட்டரை ஆய்வுக்கு அனுப்பி display இல்லாத நிலையிலும், பதிவு செய்யப்பட்டுள்ள மீட்டர் ரீடிங்கை அறிய இயலும் என்ற நிலையில் மின்மீட்டரை ஆய்வுக்கு அனுப்புமாறு மின்நுகர்வோர் கோரிய பின்னரும் ஆய்வறிக்கை பெறாமல் இருப்பது தவறானதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மின் சப்ளை கோர்டு 11(2) ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள சராசரி உபயோகம் 1800 யூனிட்டை மறு ஆய்வு செய்யுமாறு குறிப்பாக கோடை கால மின் உபயோகத்தை கடுமையான மழைக்காலத்தில் சராசரி உபயோகமாக எடுத்துக் கொண்டதை ஆட்சேபித்து மேல்முறையீட்டாளர் 09.04.2021 தேதியன்று மேற்பார்வை பொறியாளருக்கு கடிதம் அனுப்பியதாகவும், அதன் பெயரில் எவ்வித முடிவும் எடுக்காமல் இருப்பது தவறானதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கு 1/2021-இல் கட்டண காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சராசரி கட்டணம் ரூ.10,360/- யை ரத்து செய்து மேல்முறையீட்டாளர் இணைப்பில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள மின்சார மீட்டரில் பதிவு செய்யப்பட்டுள்ள Reading-யை downdload செய்து சரியான கட்டணத்தை தெரிவிக்குமாறும், மேல்முறையீட்டாளர் செலுத்தியுள்ள கூடுதல் தொகையை திரும்ப வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.12 மேலும், 11/2020 கட்டண காலத்திற்கு கூடுதலாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.4,972/- யை திரும்ப வழங்கும்படிக்கும் அவ்வாறு வசூலிப்பதற்கு உத்தரவிட்ட மின்வாரிய அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 17.09.2021 அன்று நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தில் மனுதாரர் திருமதி செல்விசாந்தாபாய், நாசரேத் அவர்களின் கோரிக்கையானது முறையாக பரிசீலிக்கப்பட்டு, இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்து தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் தமிழ்நாடு மின் வழங்கல் விதி தொகுப்பு வழிகாட்டு முறைகளின்படியே உத்தரவாக பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள மின் இணைப்பு எண் 370-011-616-க்கான மின் அளவி பழுது (no display) என கண்டறியப்பட்டு 01/2021-க்கான மின் பயன் பாட்டுக்கான சராசரி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்

வழங்கல் விதி தொகுப்பு எண் (11)–இன் வழிக்காட்டுதலின்படி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

07/2020 பயனீட்டு அளவு – 1800 யூனிட்டுகள்
09/2020 பயனீட்டு அளவு – 1800 யூனிட்டுகள்
------------------
3600 யூனிட்டுகள்
------------------

சராசரி பயனீட்டு அளவு – 3600/2 – 1800 யூனிட்டுகள்

6.3 01/2021–க்கான சராசரி 1800 யூனிட்டுக்குறிய மின்பயன்பாட்டுக்கான தொகை கணக்கீட்டு விபரம் பின்வருமாறு:

| | மின் பயன்பாடு | தொகை | மின் கட்டணத்தொகை |
|---|---|---|---|
| 1–100 | 100 யூனிட் | 0 | 0.00 |
| 101–200 | 100 யூனிட் | 3.50 | 350.00 |
| 201–500 | 300 யூனிட் | 4.60 | 1380.00 |
| 501–1800 | 1300 யூனிட் | 6.60 | 8580.00 |
| | நிரந்தரக் கட்டணம் | | 50.00 |
| மொத்த மின் | கட்டணத் தொகை | | 10,360.00 |

ரூ.10,360/– மனுதாரரால் 29.1.2021 அன்று செலுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் 11/2020–க்கான மின் அளவு 9030 என்று எடுக்கப்பட்டு பயனீட்டு அளவு முந்தைய மாத மதிப்பீடுகளான

07/2020 பயனீட்டு அளவு – 1800 யூனிட்டுகள்

09/2020 பயனீட்டு அளவு – 1800 யூனிட்டுகள் என சீராகப் பதிவாகியுள்ளதால் மீட்டர் பழுது காரணமாக 11/2020 மாதத்திற்கும், மதிப்பீடு திருத்தி அமைக்கப்பட்டு சராசரி மதிப்பீடு 1800 யூனிட்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணத்தொகை ரூ.10,360/– க்கு 11/2020–இல் மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.5,278/– ஐ கழித்து மீதமுள்ள செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,972/– ஆனது 29.03.2021 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேற்கண்ட மின் இணைப்பில் 9.1.2021 அன்று கணக்கீட்டாளரால் அளவீடு செய்யும் பொழுது (no display) ஆக இருப்பது கண்டறியப்பட்டு உதவிபொறியாளர்/விநியோகம்/நாசரேத் அவர்களால் உறுதிசெய்யப்பட்டு, மனுதாரரின் கோரிக்கையின்படி CMRI download செய்வதற்காக மின் அளவி MRT/தூத்துக்குடி ஆய்வகத்திற்கு 27.02.2021 அன்று அனுப்பப்பட்டு 12.5.2021 அன்று தேதியிட்ட கடிதம் மூலம் ஆய்வறிக்கையும் பெறப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின் வழங்கல் விதிதொகுப்பு எண் (11) ன் வழிக்காட்டுதலின் படியே 11/2020 மாதத்திற்குரிய நிலுவைத் தொகை ரூ.4,972/-ஐ கணிணியில் 13.3.2021 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரரால் 03/2021 மாதாந்திர மின் கட்டணத்தை 29.3.2021 அன்று செலுத்தும் போது மேற்கண்ட நிலுவைத் தொகை விபரம் தெரிவிக்கப்பட்டு பின்னரே வசூல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மின் இணைப்பு எண் 370-011-616-இன் 11/2020 கட்டண காலத்திற்கான மின்கட்டணம் கணக்கீட்டாளரால் நேரடியாக மின் அளவியைப் பார்த்து பதிவு செய்யப்பட தொகை ரூ.5,278/- செலுத்தியதாகவும், 3/2021 மாதத்தின் மின் கட்டணத் தொகை ரூ.3,760/- செலுத்தும்போது 11/2020-க்கு விடுபட்ட சராசரி தொகை ரூ.4,972/-யுடன் செலுத்துமாறு எதிர்மனுதாரர் கூறியதாக தெரிவித்துள்ளார். மேலும் 1/2021 கட்டண காலத்தில் மின் அளவி பழுது காரணமாக மின் வழங்கல் விதி 11(2)-இன்படி சராசரி உபயோகம் 1800 யுனிட் தீர்மானித்தது தவறு எனவும், 1/2021 மின் கட்டண மாதத்தில் பயனீட்டு அளவு பதிவு செய்யும்போது மின் அளவி "No display" இருந்ததாகவும், ஆனால் 11/2020 மின் பயனீட்டு அளவு நேரில் பார்த்து பதிவு செய்துள்ளதால் 11/2020 கணக்கிட்டு மாதத்திற்கு விடுபட்ட சராசரி மின் கட்டணம் வசூல் செய்ததை திரும்ப வழங்க வேண்டுமென கோரியுள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளரின் வீட்டு மின் இணைப்பில் மின் அளவி பழுது (No display) 09.01.2021 அன்று கண்டறியப்பட்டு மின் வழங்கல் விதி தொகுப்பு விதி எண் 11–இன்படி சராசரி பயனீட்டளவு 1800 யூனிட்டுகள் கணக்கிட்டு ரூ.10,360/– மேல்முறையீட்டாளர் 29.01.2021 அன்று செலுத்தியதாகவும், 07/2020–இல் 1800 யூனிட்டுகளும், 09/2020–இல் 1800 யூனிட்டுகளும் சீராக பதிவாகியுள்ளதால் 11/2020 கட்டணக் காலத்திலும் (1030 யூனிட்டுகள்) மின் அளவி பழுதென தீர்மானித்து 1800 யூனிட்டுகளுக்கு மின் கட்டணம் தீர்மானித்து ஏற்கனவே 1030 யூனிட்டுகளுக்கு ரூ.5,278/– செலுத்தியது போக மீதி கட்டணம் ரூ.4,972/–ஐ 3/2021 கட்டண மாதத்துடன் 29.03.2021 அன்று மேற்படி விபரம் மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்த பிறகு தான் வசூலிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 01/2021 மின் கட்டண மாதத்தில் 09.01.2021 அன்று மின் பயனீட்டளவு பதிவு செய்யும்போதுதான் மின் அளவி பழுது என (No display) தெரிய வந்துள்ளதாலும், 11/2020 கட்டண மாதத்தின் மின்பயன்பாட்டினை கணக்கீட்டாளர் நேரில் பார்த்து பதிவு செய்துள்ளதால் மேற்கண்ட காலத்தில் மின் அளவி பழுதென தீர்மானிப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை என்கிற மேல்முறையீட்டாளரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக கருதுகிறேன். எனவே 11/2020 கணக்கீட்டு மாதத்திற்கு வசூலிக்கப்பட்ட சராசரி குறைவுத் தொகை ரூ.4,972/–ஐ மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்குமாறு தீர்வு செய்கிறேன்.

7.5 மேலும், 07/2020 மற்றும் 09/2020 கணக்கீட்டு மாதங்களில் முறையே 1800 யூனிட்டுகள் மற்றும் 1800 யூனிட்டுகள் என ஒரே சீராக பதிவாகியுள்ளதாலேயே 11/2020 மாதத்தில் நேரில் பார்த்து பதிவு செய்யப்பட்டுள்ள மின் பயனீட்டளவு 1030 யூனிட்டுகள் தவறெனவும், 11/2020 மாதத்திலேயே மின் அளவி பழுதென்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல. 09.11.2020 அன்று கணக்கிட்டாளர் நேரில் பார்த்து மின்பயன்பாட்டினை பதிவு செய்திருப்பது தவறென்றும், மின்பயன்பாடு குறைவாக (1030 யூனிட்டுகள்) இருப்பதாலேயே மின் அளவி 11/2020 கணக்கீட்டு மாதத்திலேயே பழுதாகிவிட்டதாக கூறும் எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல. இத்தகைய எதிர்மனுதாரரின் அணுகுமுறை அறிவியல் ரீதியானதல்ல என்பதால் ஏற்றுக்கொள்ள முடியாது.

7.6 மின்அளவியின் CMRI data பதிவிறக்கம் செய்ய இயலவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில் மின்நுகர்வோர் பேரேட்டின் பதிவுகளின் அடிப்படையிலேதான் மின் அளவி பழுதான காலத்தை நிர்ணயம் செய்ய இயலும். 09.11.2020 அன்று 11/2020 மின் கட்டண மாதத்திற்குரிய மின்பயனீட்டளவு 1030 அலகுகள் என நேரில் பார்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது. 1/2021 மின்கட்டண மாதத்திற்கு 09.01.2021 அன்று மின் அளவி பழுது (No display) என அறியப்படுகிறது. 18.01.2021 அன்று புதிய மின் அளவி பொருத்தப்பட்டுள்ளது. ஆகையால் 10.11.2020 முதல் 18.01.2021 வரையிலான காலமே மின்அளவி பழுதான காலமாக கருதுகிறேன். எனவே மேற்படி மின்அளவி பழுதான 10.11.2020 முதல் 18.01.2021 வரையிலான காலத்திற்கு சராசரி அடிப்படையிலான மின்கட்டண தொகை வசூலிக்கப்படவேண்டும். மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் 1/2020, 1/2019, 1/2018, 1/2017 மற்றும் 1/2022 கணக்கீட்டு மாதங்களில் மின் பயன்பாடு முறையே 360, 450, 380, 440 மற்றும் 330 அலகுகள் (units) பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதாரர் அதிகபட்ச மின் பயனீட்டளவு உள்ள 07/2020 மற்றும் 09/2020 மாதங்களின் சராசரி பயனீட்டளவு 1800 அலகுகள் கொண்டு மின் அளவி பழுதான 01/2021 கட்டண மாதத்திற்கு கட்டணத்தொகை நிர்ணயம் செய்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே தமிழ்நாடு மின் வழங்கல் விதி 11(5)-இன்படி 01/2019 மற்றும் 03/2019 கட்டண மாதங்களின் பயனீட்டளவுகளின் சராசரி எடுத்து 10.11.2020 முதல் 18.01.2021 வரையிலான மின் அளவி பழுதான காலத்திற்கு குறைவுத் தொகை கணக்கீடு செய்யப்படவேண்டுமென தீர்வு செய்கிறேன். மேற்கண்டவாறு கணக்கிடப்பட்ட குறைவுத் தொகையை 01/2021 கட்டண மாதத்திற்கு வசூலிக்கப்பட்ட தொகை ரூ.10,310/-லிருந்து கழித்தது போக மீதித் தொகையை மேல்முறையீட்டாளருக்கு திரும்ப வழங்குமாறு தீர்வு செய்கிறேன்.

## 8.0 <u>முடிவுரை</u>:

8.1 பத்தி 7-இல் உள்ள தீர்வுகளின்வடி

(i) 11/2020 கணக்கீட்டு மாதத்திற்கு வசூலிக்கப்பட்ட சராசரி குறைவுத் தொகையை மேல்முறையீட்டாளருக்குத் திரும்ப வழங்குமாறு ஆணையிடுகிறேன்.

(ii) 10.11.2020 முதல் 18.01.2021 வரையிலான மின் அளவி பழுதான காலத்திற்கு 01/2019 மற்றும் 03/2019 கணக்கீட்டு மாதங்களின் பயனீட்டளவுகளின் சராசரி எடுத்து மின்கட்டண தொகை கணக்கிட்டு ஏற்கனவே வசூலிக்கப்பட்ட

தொகையுடன் நேர் செய்து அதிகப்படியான தொகையை மேல்முறையீட்டாளருக்குத் திரும்ப வழங்குமாறு ஆணையிடுகிறேன்.

8.2 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை இந்த ஆணை கிடைக்கப்பெற்றதிலிருந்து 45 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

8.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 84/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:
1. திருமதி S. செல்வி சாந்தாபாய்,
97A, 2வது ஐசக் தெரு,
நாசரேத் – 628 617.

2. மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 131, 132, எட்டபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

3. உதவிபொறியாளர்/விநியோகம்/நகர்/நாசரேத்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
62/19 HC மார்கட் தெரு, நாசரேத் – 628 617.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.